**இம்புல்பே பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

----------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

--------------------------

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

-----------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 07 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 09 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 04 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

--------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தின் காரணமாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இம்புல்பே பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

-----------------------------------------------------------------

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டின் போது சபையின் வருமானச் செலவினத்திற்கான கணக்கீட்டிற்காக பொதுப் பேரேட்டில் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விநியோகிப்பின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 84,800 தொகை கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட்டிராததுடன் ரூபா 22,800

கூட்டுத்தொகையான செலவினங்கள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கு உரித்தாக நிச்சயமாக இனங்காணப்பட்டிராத பெறவேண்டிய முத்திரைக் கட்டணங்களும் நீதிமன்றக் கட்டணத் தொகையான ரூபா 347,791 தொகையும் பெறவேண்டிய வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் மீளளிக்கும் அடிப்படையில் சம்பளமாகச் செலுத்தப்படும் ரூபா 1,349,107 தொகையான பெறவேண்டிய வருமானம் மானியமாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 165,147 தொகையான செலவினத்திற்காக நிலுவையான செலவினத்தின் கீழ் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத காரணத்தால் நிதிச் செயலாற்றல் கூற்றில் ஆண்டிற்கான செலவினம் ரூபா 165,147 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான சொத்துக்களின் மீதி மூலதன வருமானத்திலிருந்து பங்களிப்புக் கணக்கிற்கு சமப்பட வேண்டிய போதிலும் ரூபா 24,028,123 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(எ) மீளாய்வாண்டின் சனவரி முதல் மார்ச் வரையான 03 மாதங்களிற்கு உரித்தாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட முத்திரைக் கட்டணங்கள், முன்னைய ஆண்டின் முத்திரைக் கட்டணமாகக் கருதப்பட்டு திரண்ட நிதியக் கணக்கிற்குச் சீராக்கப்பட்டதன் மூலம் மீளாய்வாண்டின் வருமானம் அதே தொகையால் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) ஊழியர் கடன் பதிவேட்டின் படி, மீளாய்வாண்டின் ஊழியர்களுக்காக வழங்கப்பட்ட இடர் கடன் தொகை ரூபா 1,950,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மாதாந்த ஒன்றிணைந்த செலவினப் பொழிப்பின் படி, ரூபா 1,990,580 ஆகக் காண்பிக்கப்பட்டதன் மூலம் மீதிகளுக்கிடையே ரூபா 40,580 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நானாவித முற்பணத் தொகையான ரூபா 6,841,431 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரீட்சை மீதியின் படி இது ரூபா 684,131 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் மீதிகளுக்கிடையே ரூபா 6,157,300 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பரீட்சை மீதிக் கணக்கின் 4 மீதிகள் பேரேட்டுக் கணக்கு மீதிகளுடன் ஒப்பிடப்படுகையில் ரூபா 29,149,962 கூட்டுத்தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றின் படி, கையிலுள்ள இருப்பு ரூபா 6,922,005 ஆகக் காண்பிக்கப்பட்ட போதிலும் மெய்மையாய்வுச் சபை அறிக்கை, இருப்புப் புத்தகம் மற்றும் நுகர்வோர் பொருட் பதிவேட்டின் படி இருப்பு மீதி ரூபா 1,080,262 தொகையாகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் இருப்புப் பெறுமதியில் ரூபா 5,841,743 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(உ) மீளாய்வாண்டின் போது பெறவேண்டிய கழிவுப் பொருள் வரியான ரூபா 158,850 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் கழிவுப் பொருள் வரிப் பதிவேட்டின் படி பெறவேண்டிய கழிவுப் பொருள் வரி வருமானம் ரூபா 139,600 தொகையானமையால்

பெறவேண்டிய கழிவுப் பொருள் வரி வருமானத்தில் ரூபா 19,250 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் போது மாகாண சபை ஏற்பாடுகளின் கீழ் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,560,000 தொகையான மோட்டார் சைக்கிள் கடன்தொகையில் 08 பிரதேச சபை உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 72,288 தொகையான கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 18,147 தொகையான கடன் விடுவிப்புக் கணக்கு எனும் பெயரிலான மீதி 2002 ஆம் ஆண்டு முதல் தீர்க்கப்படாது முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காமையினால் ரூபா 7,468,344 தொகையான சொத்துக்களும் ரூபா 1,467,015 தொகையான பொறுப்பு மீதிகளும் உறுதிப்படுத்துவதற்கோ அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 2009 நவம்பர் 13 ஆம் திகதிய 438 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2013 யூன் | அரசாங்க நிறுவகங்களில் பயன்படுத்தப்படாதிருக்கும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட முடியாத சொத்துக்கள் கைதவிர்க்கப்படுவதற்கு |

| | | |
|---|---|---|
| | 05 ஆம் திகதிய PCMO/PR/2013 ஆம் இலக்க சனாதிபதிச் செயலாளரின் கடிதம் | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் செயலிழந்த நிலையில் உள்ள 151-4313 ஆம் இலக்க மோட்டார் சைக்கிள் மற்றும் 53 – 5630 ஆம் இலக்க கப் வண்டி தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதி IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிறுவகத்தில் உள்ள ரூபா 258,118 பெறுமதியான கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,039,252 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 1,846,670 தொகையானமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 10,885,922 தொகையான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த மீண்டெழும் வருமானம் ரூபா 13,361,408 இனால் அதிகரித்தமையும் செயற்பாடுகள், உபகரணம் மற்றும் மூலதனச் சொத்துக்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பிற்காக ஏற்பட்ட செலவினம் முன்னைய ஆண்டை விட ரூபா 617,402 தொகையால் குறைவடைந்தமையும் மேற்கூறப்பட்ட நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | 2014 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 90,000 | 125,764 |
| வாடகை | 36,000 | 4,220 |
| நீர் வருமானம் | 4,500,000 | 3,451,313 |
| ஆணைச்சீட்டும் தண்டப்பணமும் | 400,000 | 273,576 |
| தண்டப்பணம் (நீதிமன்றத்தலிருந்து பெறப்படும் பணம்) | 1,500,000 | 1,500,000 |
| முத்திரைக் கட்டணம் | 7,500,000 | 7,500,000 |

### 2.3.2 வீதவரி

(i) 2013 அல்லது இதற்கு முன்னைய ஆண்டிற்காக நிலுவையாகக் காணப்பட்ட வீத வரித் தொகையான ரூபா 53,568 நாளதுவரையாக அறவிடப்படுவதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 134 ஆம் பிரிவின் பிரகாரம் சபையால் பல்வேறு வசதிகள் வழங்கப்படும் அளுத்நுவர, இரத்மலானை போன்ற பிரதேசங்களில் இது வரை வீதவரி அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

(i) 2014 ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்ட் வரை அறவிட வேண்டியதாக இனங்காணப்பட்டுள்ள ரூபா 2,892,200 தொகையான முத்திரைக் கட்டணங்களும் 2014 செப்தெம்பர் மாதம் முதல் திசெம்பர் வரை இனங்காணப்படாத முத்திரைக் கட்டணங்களும் முறையாக இனங்காணப்பட்டு சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து தருவிப்பதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2003 ஆம் ஆண்டு முதல் 2014 மார்ச் வரையான காலப்பகுதியின் போது அறவிடப்பட்ட கட்டணங்களுக்கும் அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்களுக்கும் இடையே ரூபா 1,871,294 தொகையான வேறுபாடு நிலவியது.

(iii) 2014 ஆம் ஆண்டின் நீதிமன்றத் தண்டப்பணமான ரூபா 347,791 தொகை முறையாக இனங்காணப்பட்டு குறித்த அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுவதற்கு செயற்பட்டிருக்கவில்லை.

**2.3.4 ஏனைய வருமானம்**

(i) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவையான கழிவுப் பொருள் வரியின் பெறுமதி ரூபா 139,350 ஆகக் காணப்பட்டது.

(ii) சபையிடம் உள்ள 10 நீர்த் திட்டங்களில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,641,232 தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் நீர்த் துண்டிப்பின் மூலம் 72 பாவனையாளர்களிடமிருந்து ரூபா 134,643 தொகை 2015 பெப்ரவரி மாதம் வரையும் அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) 1988 பிரதேச சபை ( நிதி மற்றும் நிர்வாகம்) விதி ix ஆம் அதிகாரத்தின் 185 ஆம் விதியின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிராத காரணத்தால் மீளாய்வாண்டின் போது ஒவ்வொரு மாதமும் சபை உழைத்த வருமானத்தில் ரூபா 05 இலட்சம் முதல் 10 இலட்சம் வரையான தொகை பலாங்கொடை இலங்கை வங்கிக் கிளையில் பேணப்பட்ட இரு நடைமுறைக் கணக்குகளில் வட்டி இன்றி விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம், காணி விற்பனையில் விற்பனை விலையிலிருந்து அறவிடப்பட வேண்டிய 1% பெறுமதியாக அறவிடப்பட வேண்டிய ரூபா 345,051 தொகையான வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குரித்தான நீர்ச் செயற்திட்டங்களில் பொருத்தப்பட்டுள்ள 14 நீர் இறைக்கும் இயந்திரங்களும் ஏனைய உபகரணங்களின் பெறுமதியும் கணிப்பிடப்பட்டு பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்குரிய அளுத்நுவர மற்றும் இம்புல்பே போன்ற பிரதேசங்களில் பல எண்ணிக்கையான ගවයන් மாடுகள் கொழும்பு பதுளை பிரதான வீதியில் නිදැල්ලේ கட்டாக்காலி நிலையில் உலாவுவதாகவும் இதன் காரணமாக அம் மிருகங்களின் உயிருக்கும் வாகனங்களுக்கும் விபத்து நேரும் எச்சரிக்கை நிலவுவதாகவும் அவதானிக்கப்பட்டதுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 66(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 25,000 தொகையான ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவ் ஏற்பாடு ஆண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் படி, முகாமைத்துவ உதவியாளர் மேலதிக தரத்தில் செயலாளர் பதவியில் ஓர் வெற்றிடம் நிலவுவதுடன் குறித்த தகைமையுடன் ஓர் உத்தியோகத்தர் நியமிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 02 வருமானம் பரீட்சிப்பு உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் நிலவிய போதிலும் குறித்த பதவிகளில் கடமை மேவுகை கள ஊழியருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

### 3.3 விளைவற்ற/ குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

பிரதேச சபையிடம் உள்ள 05 வாகனங்களும் 04 இயந்திர உபகரணங்களும் விளைவற்றுக் காணப்பட்டன.

### 3.4 தாமதமான செயற்திட்டங்கள்

உள்ளுராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் கீழ் ‘‘தொரின் தொரட – கமின் கமட்ட’’ பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய திட்டத்தின் கீழ் கிராமத்திற்கான நுழைவாயில் அபிவிருத்திக்கான 50 செயற்திட்டங்களுக்காக ரூபா 20,200,000 தொகையான ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2015 சனவரி 31 ஆம் திகதியில் உள்ளவாறான முன்னேற்றத்தைக் கருத்திற்கொள்கையில் ரூபா 11,400,000 பெறுமதியான 29 செயற்திட்டங்களின் வேலை ஆரம்பிக்கப்பட்டிராததுடன் இது ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டுப் பெறுமதியில் 56 சதவீதமாகக் காணப்பட்டது.

### 3.5 சுற்றாடல் தாக்கங்கள்

சபையால் மீளாய்வாண்டின் போது கழிவுப் பொருள் அகற்றப்படுவதற்காக ஓர் தனியார் நிறுவகத்திற்கு ரூபா 87,420 செலுத்தப்பட்டிருந்த போதிலும்

கழிவுப் பொருட்கள் முறையற்ற விதத்தில் குப்பைகளிற்கு அகற்றப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல நாட்களாகக் கொண்டுவரப்படும் கழிவுப்பொருட்களைக் குப்பைத் தொட்டியில் இட்டு மூடப்படாத காரணத்தால் பிரதேசம் முழுவதும் துர்மணம் வீசியிருந்தது.

(ஆ) உக்கலடையாத பொலித்தீன், பிளாஸ்டிக் கொள்கலன்கள் ஒதுக்கப்பட்டு அவற்றை மீள்சுழற்சிக்குத் தொடர்புபடுத்தப்பட்டு அல்லது அவற்றை சேதப்படுத்துவதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்படாது குப்பைத் தொட்டியில் இடப்பட்டதன் காரணமாக பாதகமான விளைவைத் தந்திருந்தது.

(இ) பிளாஸ்டிக் கொள்கலன்களை அவ்வாறே குப்பைக்குள் போடுவதன் காரணமாக அக் கொள்கலன்களில் மழை நீர் சேர்ந்து நுளம்புகள் பரவும் அபாயம் நிலவுகின்றது.

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதிப்பிடப்பட்ட செலவினம், உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 04 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 11 சதவீதம் முதல் 35 சதவீதம் வரையான முரணும் 03 மூலதனச் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 12 சதவீதம் முதல் 76 சதவீதம் வரையான கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 சனவரி 01 ஆம் திகதிய 1/2004 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 2.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான மேலதிக நேரச் செலவினம் இதற்காக ஒதுக்கப்பட்ட

ஏற்பாட்டில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டிய போதிலும் மேலதிக மற்றும் விடுமுறை தினச் சம்பளத்திற்கான பாதீட்டு ஏற்பாட்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 60,000 இற்கு மேலதிகமாக 2014 ஆகஸ்ட் 06 ஆம் திகதி மாதாந்த பொதுக் கூட்டத் தீர்மானத்தின் படி மேலும் ரூபா 65,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது மொத்த ஏற்பாட்டின் 108 சதவீதமாகும்.

(இ) மூலதனச் செலவின விடயங்களின் கீழ் மருந்துத் தோட்டங்களைத் தயாரிப்பதற்காக ரூபா 25,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் குறித்த செயற்பாடு தொடர்பாக பௌதீக அல்லது நிதி முன்னேற்றத்தைக் காண முடியாதிருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) மனித வள முகாமைத்துவம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) வாகனப் பயன்பாடு